**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 234/2019**

**வாதி தரப்பு சாட்சி-1 முத்துலிங்கம் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 30.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் எனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 8 ம் பிரதிவாதி யாரிடம் நிலத்தை விலைக்கு வாங்கினார் என்றால் 1, 2 பிரதிவாதிகளிடம் விலைக்கு வாங்கினார். எந்த சர்வே எண்ணில் விலைக்கு வாங்கியுள்ளார்கள் என்றால் சர்வே எண். 786/9 பி ல் 80 செண்ட் நிலம் கிரையம் பெற்றுள்ளனர். எப்போது கிரையம் பெற்றனர் என்றால் தெரியவில்லை. கிரையம் வாங்கியது எப்போது தெரியும் என்றால் கிரையம் வாங்கிய 10, 15 நாட்கள் கழித்து தெரியும். இவ்வழக்கை சுமார் 6 வருடம் கழித்துதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உடனே தாக்கல் செய்துவிட்டேன்.

2) 80 செண்ட் நிலத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. 8 ம் பிரதிவாதி எங்கள் ஊரில் பல சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 8 ம் பிரதிவாதி கம்பெனிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் எனக்கு தெரிந்த பின்னிட்டு அனுப்பினேன். 8 ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தை நகல் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. எங்களுக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ள உறவுமுறையை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் ஆண்டியின் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3) 1, 2 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால், என் பாட்டாவின் இரண்டாம் மனைவி மற்றும் மகன் ஆவார்கள். என் பாட்டாவிற்கும் அவரது முதல் மனைவி மற்றும் இரண்டாம் மனைவிக்கு எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பாட்டா ராசன் எப்போது இறந்தார் என்றால் 2000 ம் ஆண்டு இறந்தார். அவரது வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இராசனின் முதல் மனைவி கன்னியம்மாள் எப்போது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. இராசனின் இரண்டாம் மனைவி

கருப்பாயி எப்போது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. கருப்பாயி 13.08.2003 ல் அவரது வாரிசுகளுக்கு ஒரு உயில் எழுதிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு கருப்பாயி உயில் எழுதிய விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

4) 8 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்திற்கு 1, 2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. என் பாட்டார் பெயரில் தான் பட்டா இருந்தது. தற்போது பட்டா 1, 2 8 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**